மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 38/2023

பெயர் : மாரிமுத்து (PW1)

த/பெ : ராமச்சந்திரன்

(Accuse Luca is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of December 2023

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் தெரிவித்தேன் . விபத்து நடந்த பின்னர் நான் என் அண்ணனை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இல்லை, மாயகிருஷ்ணனை சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். விபத்து நடந்த பின்னர் என் அண்ணன் இறந்த விவரம் தெரிந்து போலிசார் என்னை வந்து போலிசார் 1 மணி நேரம் , 2 மணி நேரம் கழித்து விசாரித்தனர் என்றால் இல்லை மருத்துவமனையில் வந்து விசாரித்தனர்.

2) விபத்து நடந்த இடத்தின் அருகில் எந்த கட்டிடமும் இல்லை என்றால் சரிதான். 100 மீட்டர் தள்ளி மேல்புறத்தில் ஒரு கட்டிடம் இருந்தது. விபத்து நடந்தது இரவு நேரம் என்றால் இரவு 7.30 மணி. விபத்து நடந்த இடத்தில் எந்தவொரு வெளிச்சமோ, மின் கம்பமோ கிடையாது என்றால் சரிதான்.

3) விபத்து ஏற்பட்ட உடன் ரோட்டை விட்டு விலகி ஓரத்தில் உள்ள கரிசல் காட்டில் விழுந்தார் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் என் அக்கா மகள் விசேஷத்திற்காக கக்கரம் பட்டிக்கு சென்றேன் என்றால் சரிதான்.

4) கக்கரம்பட்டி ஊரானது குறுக்குசாலையில் இருந்து பாஞ்சாலங்குறிச்சி செல்லும் சாலையில் உள்ளது என்றால் சரிதான். நான் புளியமரத்து அரசரடியில் வசிக்கிறேன்.நான் புளியமரத்து அரசரடியில் இருந்து நான் கக்கரம்பட்டிக்கு வருவதென்றால் தூத்துக்குடியில் இருந்து மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் குறுக்கு சாலை வந்தவுடன் இடது பக்கமாக திரும்பி பாஞ்சாலங்குறிச்சி ரோட்டில் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

5) நான் திரும்பசெல்லும் போதும் இதே பாதை தான், வேறு பாதை கிடையாது என்றால் சரிதான். என் அக்கா மகள் விசேஷத்திற்கு சென்று விட்டு திரும்பி

வரும் வழியில் நாங்கள் ரோட்டின் வலது புறம் தவறான வழியில் வந்தோம் என்றாலும் அப்போது எதிரில் லாரி வந்ததால் என் அண்ணன் பயந்து இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதில் தடுமாறி கரிசல் நிலத்தில் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விசேஷத்திற்கு போகும் வழியிலேயே விபத்து நடந்தது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.